# கோவில்பட்டி நகராட்சி

# நகர்மன்ற

# சாதாரண கூட்டம்

**அன்புடையீர்!**

**நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் ஆவணி திங்கள்-13, நாள்:-30.08.2023ம் தேதி புதன் கிழமை நண்பகல் 10.30 மணியளவில் நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

**நகர்மன்ற தலைவர்**
**கோவில்பட்டி நகராட்சி**

பொருள் எண் 1

இந்நகராட்சிக்குட்பட்ட சிதம்பராபுரம் உரக்கிடங்கு பகுதியில் 40KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் (FSTP) செயல்பாட்டில் உள்ளது. இதில் பணிபுரியும் பணியாளர்கள் Outsourcing முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இப்பணிக்கான மதிப்பீடு தொகை முடிவுற்றதால் மேற்கண்ட திட்டத்தினை முறையாக பராமரிக்கும் பொருட்டு ஆண்டு பராமரிப்பு பணியாக மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தொகை ரூ18.80/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கெள்ளலாம்.

தீர்மானம் எண்: 625
தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 2

கோவில்பட்டி நகராட்சிக்கு குடிநீர் வழங்கி வரும் குடிநீர் திட்டம்-IIல் சீவலப்பேரி தலைமை நீரேற்று நிலையத்தில் 220 HP மின் மோட்டார் பம்பு செட்கள் 3 எண்ணங்கள் நிலைய அருகில் தாமிரபரணி ஆற்றில் அமைந்துள்ள 11 எண்ணம் நீர் உறிஞ்சு கிணறுகளில் தலா 2 எண்ணங்கள் கொண்டும் நீர் மூழ்கி மின் மோட்டார் பம்புகளும், இளவேலங்கால் நீர் உந்து நிலையத்தில் 150HP மின்மோட்டார்கள் 3 எண்ணங்களும் நகரில் பூங்கா நீர் உந்து நிலையத்தில் 35 HP நீர் மூழ்கி மின்மோட்டார் முதல் 25HP,20HP நீர் மூழ்கி மின்மோட்டார் தலா 2 எண்ணங்களும் இயக்கத்தில் உள்ளது. மேற்கண்ட நிலையங்களிலுள்ள மின்மோட்டார்கள் பம்பு செட்டுகளை இயக்கம் செய்யவும், பராமரிக்கவும் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் வெளிக்கொணர்வு முகமை (Outsourcing) முறையில் 10 நபர்களை வைத்து இயக்கும் பணிக்கு ஆகும் செலவினத்தொகை ரூ17.50/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

இப்பணியை பொது நிதியின் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 626
தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 3

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 2022/2023ஆம் ஆண்டுக்கு தேவையான எழுதுபொருட்கள், பணமதிப்புள்ள இரசீது புத்தகம், பணமதிப்பு கணினி ரசீதுகள், பதிவேடுகள், படிவங்கள் கணினி பிரிண்டருக்கு தேவையான டோனர்கள் ரிப்பன் மற்றும் அனைத்து வகையான உதிரி பாகங்கள் அவ்வப்போது தேவைக்கேற்ப அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சக சங்கம் மூலம் வாங்கிகொள்ள மன்றம் தீர்மானம் எண் 159 நாள்.29.07.2022 மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளது. கூடுதல் செலவீனமாக ரூ1032814/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2272/2020/பி2

தீர்மானம் எண்: 627

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 4

கோவில்பட்டி நகராட்சிக்கு குடிநீர் வழங்கி வரும் குடிநீர் திட்டம்-II-ல் சீவலப்பேரி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நாள்தோறும் சராசரியாக 8.50MLD குடிநீர் பெறப்பட்டு நகரில் அமைந்துள்ள 17 எண்ணங்கள் மேல்நிலை தொட்டியில் நீர் ஏற்றப்பட்டு நகரின் அனைத்து பகுதிகளுக்கும் பகிர்மானம் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி 17 எண்ணங்கள் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் உள்ள பகிர்மான சுலீங் வால்வுகளை Operating செய்ய இந்நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாமல் உள்ளதால் மேற்படி பணி செய்வதற்கு 12 நபர்கள் (Valve Operating) வெளிக்கொணர்வு முகமை (Outsourcing) முறையில் பணிகள் செய்வதற்கு ஆகும் செலவினத்தொகை ரூ16.50/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

அலுவலக குறிப்பு

இப்பணியை குடிநீர் நிதியின் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 628

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண் 5**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள 82.5KVA ஜெனரேட்டர் பழுதடைந்துள்ளதால் அதிலுள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு 04.08.2023 அன்று கீழ்கண்டவாறு விளைப்புள்ளிகள் பெறப்பட்டதில்.

1. GENEARTH SERVICES KOVILPATTI - 26546/- குறைவு
2. ASIAN POWER CHENNAI - 28202/- அதிகம்
3. MUTHU GAB SREVICES KOVILPATTI - 28000/- அதிகம்

வரப்பெற்றுள்ள 3 விளைப்புள்ளிகளில் குறைவான விளைப்புள்ளி கொடுத்துள்ள GENEARTH SERVICES KOVILPATTI நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 629

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண் 6**

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 2023-2024ஆம் ஆண்டுக்கு தேவையான எழுதுபொருட்கள், பணமதிப்புள்ள இரசீது புத்தகம், பணமதிப்பு கணினி ரசீதுகள் ,பதிவேடுகள், படிவங்கள் கணினி பிரிண்டருக்கு தேவையான டோனர்கள் ரிப்பன் மற்றும் அனைத்து வகையான உதிரி பாகங்கள் அவ்வப்போது தேவைக்கேற்ப அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சக சங்கமான THE KOVILPATTI PRINTERS INDL CO-OP SOCIETY LTD KOVILPATTII நிறுவனத்திடம் வாங்கவும் அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ-20.00/- (இருபது இலட்சம்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான THE KOVILPATTI PRINTERS INDL CO-OP SOCIETY LTD KOVILPATTI நிறுவனத்திடம் அவ்வப்போது தேவைப்படும் போது வாங்கி கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2272/2020/பி2

தீர்மானம் எண்: 630

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்: 7

கோவில்பட்டி நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள கீழே குறிப்பிடும் வாகனங்களின் உபயோகம் 23 ஆண்டுகளிலிருந்து 36 ஆண்டுகள் பயன்படுத்தப்பட்டு இயக்க முடியாத நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு,

| வ.எண் | வாகன எண் | வருடம் |
|---|---|---|
| 1. | TAC 1007 | 36 ஆண்டுகள் |
| 2. | TN 69 Z 5369 | 28 ஆண்டுகள் |
| 3. | TN 69 Y 1070 | 25 ஆண்டுகள் |
| 4. | TN 69 Y 8077 | 23 ஆண்டுகள் |

Ministry of Road Transport and Highways, Notification 16th January 2023 மத்திய அரசால் வெளியிடப்பட்ட The Gazette-ன் அடிப்படையில் 15 வருடங்கள் முடிந்த வாகனங்கள் இயக்க கூடாது என அறிக்கையின் அடிப்படையில் கழிவு நீக்கம் செய்யப்பட வேண்டி அவசியம் ஏற்பட்டுள்ளது.

அதன்படி, மேற்படி வாகனங்கள் அனைத்தையும் கழிவு நீக்கம் செய்துவிட்டு புதியதாக வாகனங்கள் வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 631

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்: 8

கோவில்பட்டி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி ரூ148.00/- இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. மேலும் கோட்டைத்தாய், கோவில்பட்டி அவர்களின் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அவரது மேற்கண்ட பணி நடைபெற்று வரும் இடத்தில் கிறிஸ்தவர்களின் கல்லறை உள்ளது. அதனை இடித்து சேதப்படுத்தியுள்ளதால் அதனை மீண்டும் கட்டித்தர வேண்டி வழக்கு தொடரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.மேற்படி வழக்கினை வாதாடுவதற்கான கட்டணத்தொகை ரூ9,500/- க்கு கேட்பு வழக்கறிஞர் G.V.Vairam Santhosh Addl. Government Pleader, மதுரை உயர்நீதிமன்ற கிளை அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.எனவே மேற்கண்ட வழக்கிற்கான கட்டணத்தொகை ரூ9,500/- வழக்கறிஞர் அவர்களுக்கு காசோலை (அ)

NEFT, RTGS மூலம் தொகை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 632

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 9

இந்நகராட்சிக்குட்பட்ட சிதம்பராபுரம் உரக்கிடங்கு பகுதியில் அமைந்துள்ள நாய் அறுவை கூடம் (Dog Shelter) கட்டிட பகுதி முற்றிலும் பழுதடைந்துள்ளதால் அந்த கட்டிடத்தினை சீரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவரும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ6.50/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. பொதுநிதியின் கீழ் இப்பணியை செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 633

தீர்மானம்:அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 10

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 திருமங்கை நகர் 2வது தெரு பகுதியில் உள்ள வடிகால் பழுதடைந்து பொது மக்களுக்கு இடையூறாக இருப்பதால் பழுதடைந்த வடிகாலை அகற்றிவிட்டு புதியதாக வடிகால் அமைக்கும் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ-6.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 634

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 11

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 முகமது சாலிஹறாபுரம் 5வது தெருவிலுள்ள வடிகால் பழுதடைந்து பொது மக்களுக்கு இடையூறாக இருப்பதால் அதனை அகற்றிவிட்டு புதியதாக வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ-11.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 635

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 12

இந்நகராட்சிக்குட்பட்ட புதுகிராமம் பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022-2023-ன் கீழ் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி ரூ148.00/- இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. அதன்படி மேற்கண்ட பணி முடிவுற்ற பின் அதனை பராமரிக்கும் பணியினை தங்களிடம் ஒப்படைக்குமாறு JEEVA ANUGRAGAA PUBLIC WELFARE CHARITABLE TRUST, KOVILPATTI அவர்களால் 10.08.2023 அன்று கடிதம் வழங்கப்பட்டுள்ளது. எனவே புதியதாக அமைக்கப்பட்டு வரும் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி முடிவுற்றவுடன் அதனை பராமரிக்கும் பணியை JEEVA ANUGRAGAA PUBLIC WELFARE CHARITABLE TRUST, KOVILPATTI அவர்கள் மூலம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சியால் நடைமுறை படுத்தும் நிபந்தனைகளின் அடிப்படையில் JEEVA ANUGRAGAA PUBLIC WELFARE CHARITABLE TRUST, KOVILPATTI அவர்களின் விண்ணப்பம் ஏற்கலாம்.

தீர்மானம் எண்: 636

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 13

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.17380/2022/SBM2 நாள்.25.11.2022ன்படி தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் கீழ் ஏற்படுத்ததப்பட்ட அமைப்பாணை Safai Mitra Surakishit Shehar (SSS) உரிய அதிகார அமைப்பின் கீழ் மாவட்ட ஆட்சியத்தலைவர் அவர்களின் தலைமையில் Responsible Sanitation Authority (RSA) அமைப்பினை

வழிகாட்டியில் உள்ள உறுப்பினர்களுடன் ஏற்படுத்தப்பட்டது. திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2800/2022/ஆ2 நாள்.14.08.2023ன்படி தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் மனித கழிவுகளை மனிதர்களே அள்ளுவதை தடுத்தல் மற்றும் இயந்திரங்கள் மூலம் கழிவுகளை அகற்றுதல் சம்பந்தமான புகார் அளிக்க BSNL நிறுவனம் மூலம் 24x7 Toll Free Help line 1800 4444 உதவி மையம் கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டு, BSNL நிறுவனத்தினரிடமிருந்து (23.06.2023 முதல் 31.07.2023) பெறப்பட்ட Telephone charges Invoice Bill ரூ.5999/-யை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கு வழங்க மன்ற பொருள் வரைவு ஒப்புதலுக்கு

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.52/2023/எச்1

தீர்மானம் எண்: 637

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 14

கோவில்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் புதுக்கிராமம் வாக்குச்சாவடி மையம் சுமார் 50 ஆண்டு பழமையானதால், மேற்படி கட்டிடம் சேதமடைந்து இடிந்த நிலையில் உள்ளதால், அதன் அருகில் சுமார் 250 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள விவேக் நர்சரி துவக்கப்பள்ளி மற்றும் 400மீட்டர் தொலைவில் அமைந்துள்ள இல்லத்தார் நடுநிலைப்பள்ளி புதுக்கிராமம் பகுதிக்கு பட்டியலில் கண்டபடி,

| வாக்குச்சாவடி எண் | பழைய வாக்குச்சாவடி அமைவிடம் | மொத்த வாக்காளர் மற்றும் பாகத்தின் பிரிவின் தெரு | புதிய வாக்குச்சாவடி அமைவிடம் |
|---|---|---|---|
| 186 | ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் புதுக்கிராமம். கோவில்பட்டி | 1.லாயல் மில் வடக்கு லயன் வார்டு.1,3<br>2.பிரதானச் சாலை வார்டு 6<br>3.முகமதுசாலியாபுரம்பள்ளி வாசல் தெரு2 | விவேக் நர்சரி மற்றும் துவக்கப்பள்ளி புதுக்கிராமம் கோவில்பட்டி |
| 187 | | 1கோவில்பட்டி லாயல் மில் குடியிருப்பு பங்களாத்தெரு வார்டு 6<br>2.மில் தெரு வார்டு 1,2<br>3.பங்களா தெரு வார்டு 12 | இல்லத்தார் நடுநிலைப்பள்ளி. புதுக்கிராமம். கோவில்பட்டி |

| | | | |
|---|---|---|---|
| | | வடக்கு புதுக்கிராமம் தெரு 4.வார்டு. | |
| 188 | | வடக்கு புதுக்கிராமம் தெரு 1 வார்டு 13 | |
| 189 | | வடக்கு புதுக்கிராமம் தெரு 2 வார்டு 13. வடக்கு புதுக்கிராமம் தெரு 3 வார்டு 7 | |

வாக்குச்சாவடி மையம் மாற்றியமைக்கப்படுவதால் புதியதாக தேர்ந்துதெடுக்கப்பட்ட வாக்குச்சாவடி மையத்தில் வாக்குச்சாவடி எண்கள் 186,187,188, மற்றும் 189 வாக்குச்சாவடி மையம் செயல்பட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,

<u>அலுவலககுறிப்பு:-</u>

கோவில்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் புதுக்கிராமம் வாக்குச்சாவடி மையம் சுமார் 50 ஆண்டு பழமையான கட்டிடம் சேதமடைந்து இடிந்த நிலையில் உள்ளதால், அதன் அருகில் புதியதாக தேர்ந்துதெடுக்கப்பட்ட வாக்குச்சாவடி மையத்தில் வாக்குச்சாவடி எண்கள் 186,187,188, மற்றும் 189 சுமார் 250 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள விவேக் நர்சரி துவக்கப்பள்ளி மற்றும் 400மீட்டர் தொலைவில் அமைந்துள்ள இல்லத்தார் நடுநிலைப்பள்ளி புதுக்கிராமம் பகுதிக்கு வாக்குச்சாவடி மையம் செயல்பட மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.340/2020/சி2

தீர்மானம் எண்: 638

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 15

கோவில்பட்டி நகராட்சிக்கு குடிநீர் வழங்கி வரும் குடிநீர் திட்டம் II-ல் சீவலப்பேரி தலைமை நீரேற்றும் நிலையம், சீவலப்பேரி தாமிரபரணி ஆற்று நீர் உறிஞ்சு கிணறுகள் இளவேலங்கால் மற்றும் நகர் பூங்கா நீர் உந்து நிலையங்களில் இயங்கி வரும் அனைத்து மின்மோட்டார் பம்பு செட்டுகளுக்கும் தேவையான மின் உதிரி பாகங்கள் மற்றும் பைப் லையன் உதிரி பாகங்கள் புதியதாக வாங்கி பொருத்தும் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ9.50./- இலட்சம் செலவுத்தொகைக்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 639

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண் 16**

**நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.12091/2023/எம்ஏ2, நாள்:09.08.2023 கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 மற்றும் விதிகள் 2023 - தொடர்பான பயிலரங்கம் 22.06.2023 அன்று கலைவாணர் அரங்கத்தில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு நடைபெற்றது.**

**இப்பயிலரங்கத்தில் மாநகராட்சி/நகராட்சி ஆணையர்கள், மண்டல இயக்குநர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் பேரூராட்சி உதவி இயக்குநர்கள், செயல் அலுவலர்கள் கலந்துகொண்டனர். ஒவ்வொரு மாநகராட்சி மற்றும் நகராட்சி செலவின தொகையினை ECS மூலம் செலுத்துமாறு தெரிவித்துள்ளனர். மேலும் சிறப்புநிலை நகராட்சிக்கு ரூ.20,000/-க்கான பங்குத் தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.3366/2023/சி1**

**தீர்மானம் எண்: 640**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 17**

**இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18 பார்க் கிழக்குகுறுக்ததெருவில் அமைந்துள்ள பாலம் பழுதடைந்து பொதுமக்களுக்கு இடையூறாக இருப்பதால் அதனை அகற்றிவிட்டு புதியதாக சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ1.25/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு**

**இப்பணியை பொது நிதியின் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண்: 641**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 18**

**கோவில்பட்டி நகராட்சிக்கு SWATCH BHARATH MISSION(V)2.0 திட்டத்தின் கீழ் கழிவுநீர் டேங்க் ஊர்தி வாகனம் 2 எண்ணம் புதியதாக வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9192/2022/SBM-1 நாள்.21.08.2023ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்டவாறு நிதி ஒதிக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

| வ.எண் | வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் கொள்ளளவு | மத்திய அரசு நிதி | மாநில அரசு நிதி | நகராட்சி நிதி | மொத்தம் தொகை(ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 எண்ணம் மற்றும் 6 | 43.25 | 28.55 | 14.71 | 86.51 |

மேற்கண்ட திட்டத்தின் கீழ் நிதி ஒதிக்கீடு செய்யப்பட்டுள்ளதால் 2 எண்ணம் வாகனங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட வாகனங்களை ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மற்றும் SBM(U) 2.0 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 642

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 19

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20 ஓதுவார் முடுக்கு தெருவில் உள்ள பழைய மின்மோட்டார் அறையை இடித்து அகற்றிவிட்டு புதியதாக சிறுமின் விசை மோட்டார் அறை கட்டும் பணிக்கு 20.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 29.07.2022 அன்று பணிக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி துவங்கப்பட்டு நடைபெறும் போது அருகிலுள்ள பழுதடைந்த சிறுபாலத்தினை சரிசெய்யவும் மற்றும் நகராட்சிக்குசொந்தமான கிணற்றினை சுத்தப்படுத்தி சுவர் பழுதுகளை உயர்த்தி பாதுகாப்பு உயர்த்தி பாதுகாப்பு M/S We'd Mseh மூலம் கிணற்றினை பலப்படுத்தி பொதுமக்கள் மற்றும் உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் மதிப்பீட்டுத்தொகை ரூ1.40/- இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது. எனவே இக்கூடுதல் பணிகள் செய்யப்பட்டதற்கு திருத்திய மதிப்பீட்டுத்தொகை ரூ2.90/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. இப்பணியில் ஏற்பட்டள்ள கூடுதல் தொகையினை பொது நிதியின் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளதால் கூடுதலாக வரப்பெற்ற திருத்தி மதிப்பீட்டுத் தொகையை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 643

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 20

கோவில்பட்டி நகராட்சி வார்டு எண் 1 முதல் 18 வரையுள்ள வார்டு பகுதிகளில் இரண்டாம் குடிநீர்த் திட்டப் பணிகளளான தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியத்தால் பதிக்கப்பட்ட பகிர்மானக் குழாய்களில் தண்ணீர் விட்டு சோதனை செய்திடவும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியத்தால் விடுப்பட்ட பகிர்மான குழாய்கள் மற்றும் வீட்டிணைப்புகளைப் பொருத்தியும் மேலும் முதல் குடிநீர் திட்ட இணைப்புகளைக் கண்டறிந்து முழுமையாக துண்டித்து இரண்டாம் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்தி அதன் மூலம் சீரான குடிநீர் விநியோகம் செய்திட வேண்டியுள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் படி உத்தேச செலவினம் ரூ20.00/- இலட்சத்திந்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 644

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 21

கோவில்பட்டி நகராட்சி வார்டு எண் 19 முதல் 36 வரையுள்ள வார்டு பகுதிகளில் இரண்டாம் குடிநீர்த்திட்டப் பணிகளான தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியத்தால் பதிக்கப்பட்ட பகிர்மானக் குழாய்களில் தண்ணீர் விட்டு சோதனை செய்திடவும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியத்தால் விடுப்பட்ட பகிர்மான குழாய்கள் மற்றும் வீட்டிணைப்புகளைப் பொருத்தியும் மேலும் முதல் குடிநீர் திட்ட இணைப்புகளைக் கண்டறிந்து அதனை நீக்கி இரண்டாம் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்தி அதன் மூலம் சீரான குடிநீர் விநியோகம் செய்திட வேண்டியுள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் படி உத்தேச செலவினம் ரூ20.00/- இலட்சத்திந்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 645

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண் 22**

**கோவில்பட்டி நகராட்சி கணினி வரிவசூல் மையத்தில் உள்ள பிரிண்டர் அடிக்கடி பழுதடைவதால் பழுதடைந்த பிரிண்டரை அகற்றிவிட்டு புதியதாக Epson FX890IIபிரிண்டர் 3 எண்ணம் வாங்கும் பணிக்கு ரூ80,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்பட்டுகிறது.**

**அலுவலக குறிப்பு**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண்: 646**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 23**

**கோவில்பட்டி நகராட்சியில் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் தீவிர தூய்மைப்பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவதற்கு இரு வண்ண குப்பை தொட்டிகள், பொது மற்றும் வணிக பகுதியில் நிரந்தர இரு வண்ண குப்பை தொட்டி அமைக்க, விழிப்புணர்வு விளம்பர பதாகைகள் தயார் செய்ய சிறப்பாக திடக்கழிவு மேலாண்மையை கையாளுபவர்களுக்கு பரிசு பொருட்கள் கொடுத்து ஊக்கப்படுத்த, மரம் நடுதல் மற்றும் பராமரிக்கவும், பள்ளி, கல்லூரி மற்றும் பொது இடங்களில் தூய்மைப்பணி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், பள்ளி மாணவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை சம்பந்தமாக போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குவது மற்றும் அவ்வப்போது அரசு மேற்கொள்ளச் சொல்லும் திட்டங்களுக்குத் தேவையான பொருட்கள் வாங்குதல், மழைநீர் கால்வாய் சுத்தம் செய்ய JCB வாகனத்தை வாடகைக்கு எடுத்தல் போன்ற அனைத்து செயல்பாடுகளுக்கும் 2023-24ம் ஆண்டிற்கான பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான உத்தேச செலவினத்தொகை ரூ.2.0 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1218/2022/எச்1**

**தீர்மானம் எண்: 647**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 24**

**தமிழக அரசின் இரண்டாண்டு சாதனைகளை சிறப்பு மலரில் அரசு விளம்பரங்கள் வெளியிட கடித வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கோவில்பட்டி நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்து நாளிதழ் மற்றும் சாதனை மலர் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் திட்டப்பணிகள் வெளியிட்டமை குறித்து கீழ்க்கண்டவாறு பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது.**

1. Express publication (Madurai) pvt ltd - ரூ9,975/-

மேற்கண்ட பத்திரிக்கை நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 648

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 25

இந்நகராட்சிக்குட்பட்ட சீவலப்பேரி தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள கிணறுகளை சீரமைக்கவும், தூர்வாரவும் மற்றும் துளைகளை அடைக்கவும் சேனல் அமைக்கவும் (ம) கெப்பசிட்டர் பொருத்தி PF சரி செய்யவும் போன்ற இதர பராமரிப்பு பணிகளை செய்யும் பணிக்கு ரூ9.90/- இலட்சத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சீவலப்பேரி தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள தாமிரபரணி ஆற்றுப்படுக்கையில் உள்ள 9 நீருஞ்சி கிணறுகளை சுத்தம் செய்யவும் மோட்டார் அறையில் உள்ள Capaciter கள் மாற்றவும் மதிப்பீட்டில் உள்ளது. மேலும் பணிகளை துவக்கி 9 நீருஞ்சி கிணறுகள் தூர்வாரப்பட்டுள்ளது. Capaciter கள் நல்ல நிலையில் இருப்பதால் அதற்கு பதிலாக பழுதடைந்த நிலையில் உள்ள இளவேலங்கால் நீருந்து நிலையம், பார்க், வீரவாஞ்சி நகரிலுள்ள OHT-களிலுள்ள மின்மோட்டார் பழுது நீக்கி குடிநீர் அவசியம் கருதி பணிமேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிகள் அனைத்தும் அங்கிகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத இனங்களாக இருப்பதாலும் இப்பணிகள் அனைத்தும் மதிப்பீட்டிற்குள்ளே செய்து முடிக்கப்பட்டுள்ளதால் அதனை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணி ஏற்கனவே தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்குள் செய்து முடிக்கப்பட்டுள்ளதால் அதனை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 649

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 26

கோவில்பட்டி நகராட்சி வார்டு எண் 1 முதல் 36 வரையுள்ள வார்டுப் பகுதிகளில் இரண்டாம் குடிநீர் திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் மேற்கண்ட அனைத்துப் பகுதிகளிலும் ஆங்காங்கே பகிர்மானக் குழாய்கள் விடுபட்டு பகுதி பிரிக்கபடாமல் உள்ளது. (Segregation Work). ஆகையால்

மேற்கண்ட பகுதிகளில் விடுபட்ட பகிர்மான குழாய்களை அமைத்து, பொருத்தி குடிநீர் சோதனை செய்து சீரான குடிநீர் விநியோகம் செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் படி உத்தேச செலவினம் ரூ40.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 650

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 27

கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 செக்கடி தெரு பிள்ளையார் கோவில் அருகிலுள்ள குடிநீர் தொட்டி மற்றும் பம்புரூம் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் அபாயம் உள்ளதாக நகர்மன்ற உறுப்பினர் கோரியதால் இடம் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட சிமிண்ட் தொட்டி மற்றும் பம்புரூம் கட்டப்பட்டு சுமார் 30 ஆண்டுகள் மேலானது. மேலும் ஆங்காங்கே உடைந்துள்ளது. எனவே மேற்கண்ட பழுதடைந்த அந்த கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக பம்புரூம் அமைத்து குடிநீர் தொட்டி (PVC) அமைக்க ஆகும் உத்தேச செலவீனம் தொகை ரூ2.00/- இலட்சத்திற்கு பணிசெய்ய பார்வைக்கும் பொருளுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண்: 651

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 28

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 நடராஜபுரம் பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி அருகில் சமையற் கூடம் மற்றும் கழிப்பிடம் கட்டி தருமாறு நகர்மன்ற உறுப்பினர் (ம) நகர்மன்ற தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட பகுதியில் அங்கன்வாடி மையம் அருகில் புதியதாக சமையற் கூடம் மற்றும் கழிப்பிடம் கட்டும் பணிக்கு ஆகும் செலவினத்தொகை ரூ25.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

இப்பணியை கல்வி நிதியின் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 652

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்: 29**

**இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 36 வரையிலான பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு குழாய் உடைப்புகள் பழுதுகளை சரி செய்வதற்கும், குடிநீர் விநியோக குழாய் இணைப்புகளில் பழுதுகளை நீக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ9.90/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு:-**

**இப்பணியை குடிநீர் நிதியின் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண்: 653**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**நகர்மன்ற தலைவர்**
**கோவில்பட்டி நகராட்சி**